தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### உள் தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு

உள் தமிழகத்தில் வியாழக்கிழமை (செப்.25) ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் 80 மி.மீ, நாமக்கல், சேலம் மாவட்டம் கருமந்துறையில் தலா 70 மி.மீ, திருப்பூர், கோவை, சேலம், அஞ்சட்டி, சேந்தமங்கலம், தம்மம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் பரூர், சூலூர், ஊத்தங்கரையில் தலா 50 மி.மீ, கடவூர், வாழப்பாடி, கோவை மாவட்டம் அன்னூர், வேடசந்தூர், துறையூர், ஓமலூர், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் தலா 40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. முன்னறிவிப்பு: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் பலத்த மழையும், மீதமுள்ள மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பில்லூர் அணைக்குபாதுகாப்பு அதிகரிப்பு

காரமடையை அடுத்துள்ள பில்லூர் அணைக்கு பாதுகாப்பை அதிகரிப்பதென, அணையின் பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. புலனாய்வுத் துறை உதவி

இயக்குனரின் உத்தரவுப்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில், பாதுகாப்பு முக்கியத்துவம் நிறைந்த இலக்காகக் கருதப்படும் பில்லூர் அணையைப் பாதுகாப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம், பில்லூரை அடுத்த பரளி மின்நிலைய அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பரளி மின்நிலைய செயற்பொறியாளர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசியது: கோவை மாவட்ட எல்லைக்கு உள்பட்ட பரளி மின்நிலையம்-3, பில்லூர் மின்நிலையம், பில்லூர் அணைப்பகுதி ஆகியவை பாதுகாப்புக் கருதி, தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சந்தேகத்திற்கு இடமான நபர்களின் நடமாட்டம் இருந்தால், உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். பில்லூர் அணைக்கு பாதுகாப்பை அதிகரிப்பதெனை முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலக உதவியாளர் ராதாகிருஷ்ணன், தீயணைப்பு நிலைய அலுவலர் பழனிசாமி, காரமடை வனச்சரக அலுவலர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>பூசாரி நாயக்கன் குளத்திற்கு தண்ணீர் திறப்பு</u>

விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, உடுமலை வட்டம், ஆலாம்பாளையம் கிராமத்தில் உள்ள பூசாரி நாயக்கன் குளத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. 76 ஏக்கர் பரப்பளவு கொண்ட இக்குளத்தின் மூலம், 88 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. 10-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு நிலத்தடி நீர் ஆதாரமாகவும் இந்தக் குளம் விளங்கி வருகிறது. உடுமலை அருகில் உள்ள திருமூர்த்தி அணை கட்டுவதற்கு முன்பு பாலாற்றுப் படுகையின் மூலம் பூசாரி நாயக்கன் குளத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. அணை கட்டிமுடித்தவுடன் ஒரு சில காரணங்களால் இந்தக் குளத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் 10-க்கு மேற்பட்ட கிராம மக்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, பிஏபி திட்ட தொகுப்பின் துணைப் பாசனப் பகுதியாக கருதி மானுப்பட்டி கிளை வாய்க்காலில் புதிய மதகு ஒன்றை அமைத்து பூசாரி நாயக்கன் குளத்திற்கு தண்ணீர் வழங்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் நீண்ட வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில்,

இதற்கான அரசு உத்தரவு செவ்வாய்க்கிழமை மாலை அரசிதழில் வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை மாலை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். உடுமலை வருவாய்க் கோட்டாட்சியர் நா.குணசேகரன், பிஏபி செயற்பொறியாளர் கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் செல்லமுத்து, விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பவானி, அம்மாபேட்டை பகுதியில் கனமழை

பவானி, அம்மாபேட்டை சுற்றுவட்டாரப் பகுதிகளில் இரண்டாவது நாளாக இடி, மின்னலுடன் செவ்வாய்க்கிழமை இரவு கனமழை பெய்தது. கடந்த இரு நாள்களாக இரவு நேரங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் மேற்குக்கரை விவசாயிகள் நெல் நடவுப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். மேலும், மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்களைக் காக்க இந்த மழை உதவியதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். 2}வது நாளாக செவ்வாய்க்கிழமை இரவு பவானி மற்றும் அம்மாபேட்டை கிராமப் பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால், அம்மாபேட்டை சக்தி நகர், ஊமாரெட்டியூர் பிரிவு மற்றும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி, வீடுகளில் இருப்பவர்கள் வெளியே நடமாட முடியாமல் சிரமத்துக்குள்ளாகினர். கோபி, சத்தி, அந்தியூர் பகுதியில் பெய்த மழையால் பவானி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. காலிங்கராயன் அணைக்கு செவ்வாய்க்கிழமை காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 862 கன அடியாக இருந்தது. தொடர்ந்து மழைநீர் சேர்ந்து வந்ததால் நீர்வரத்து நண்பகல் 12 மணி நிலவரப்படி 2,984 கன அடியாக அதிகரித்தது. காலிங்கராயன் வாய்க்காலில் பாசனத்துக்காக 546 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. உபரி நீர் முழுவதும் காவிரி ஆற்றில் கலக்கிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நெடுங்கல்லில் 87.2 மி.மீ. மழை பதிவு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதன்கிழமை காலை வரை நெடுங்கல்லில் அதிகபட்சமாக 87.2 மி.மீ. மழை பதிவானது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த போதும், இரவில் பரவலாக மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு பரவலாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால், கிருஷ்ணகிரியில் சில பகுதிகள், காவேரிப்பட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழையளவு: (மி.மீட்டரில்): பெணுகொண்டாபுரம் 12.5, தளி - 13, சூளகிரி - 27, கிருஷ்ணகிரி - 34.6, போச்சம்பள்ளி - 35.6, ஊத்தங்கரை - 45, பாரூர் - 47.7, அஞ்செட்டி - 50, தேன்கனிக்கோட்டை - 52, ராயக்கோட்டை - 54, நெடுங்கல் - 87.2 மழைபதிவானது.

## விராலிமலை பகுதியில் பலத்த மழை

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.
விராலிமலை பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்துவந்தது. இந்நிலையில் புதன்கிழமை மாலையில் சுமார் 2 மணிநேரம் பெய்த மழையால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரிப்பன் மாளிகையில் அமைகிறது மாடி தோட்டம்

சென்னை : முகப்பேரில் அமைந்துள்ள முன்மாதிரி வீட்டு தோட்டம் குறித்து, நேற்று வெளியான, 'தினமலர்' நாளிதழ் செய்தியின் எதிரொலியாக, அந்த வீட்டு உரிமையாளரை அழைத்த மேயர் சைதை துரைசாமி, ரிப்பன் மாளிகையில் மாடி தோட்டம் அமைக்க

ஆலோசனைகளை வழங்க கேட்டுக் கொண்டார். சென்னை முகப்பேர், ஸ்பார்டன் அவென்யூவை சேர்ந்தவர், ஜஸ்வந்த் சிங். அவர், தன் வீட்டில் வீட்டு தோட்டம், மாடி தோட்டம் அமைத்து உள்ளார். சென்னைக்கு முன்மாதிரியாக விளங்கும் இந்த வீட்டு தோட்டம் குறித்து, நேற்று 'தினமலர்' நாளிதழில் செய்தி வெளியானது. இதன் எதிரொலியாக, மாநகராட்சி அழைப்பின் பேரில், நேற்று மாலை 4:00 மணிக்கு, ரிப்பன் மாளிகைக்கு குடும்பத்துடன் வந்த ஜஸ்வந்த் சிங், மேயர் சைதை துரைசாமியை சந்தித்தார். தன் வீட்டு தோட்டம், மாடி தோட்டம் குறித்து அவர் கையடக்க கணினியில் வைத்திருந்த பதிவுகளை காண்பித்தார். மாடி தோட்டத்தில் பிளாஸ்டிக் ட்ரம்களில் வளர்க்கப்படும், ஹைபிரிட் பழ வகை மரங்களை பார்த்து வியந்த மேயர் சைதை துரைசாமி, இதுபோன்ற மாடி தோட்டத்தை ரிப்பன் மாளிகையில் அமைக்க இருப்பதாக கூறினார். அதற்கு தகுந்த ஆலோசனைகளை, மாநகராட்சி அதிகாரிகளுக்கு வழங்குமாறு, ஜஸ்வந்த் சிங்கை கேட்டுக் கொண்டார். மேலும், சென்னையில் வீட்டு தோட்டம், மாடி தோட்டம் அமைப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது.மேயர் அறிவுறுத்தலை தொடர்ந்து, ரிப்பன் மாளிகையின் மேல்தளத்தில் விரைவில் மாடி தோட்டம் அமையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>தாம்பரத்தில் திடீர்மழை</u>

தாம்பரம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில், நேற்று மதியம் முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது, குளிர்ச்சியுடன் கூடிய காற்று வீசியது. இதையடுத்து, மதியம் 2.40 மணிக்கு, காற்றுடன் கூடிய மழை சிறிது நேரம் பெய்தது. இதனால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## <u>தரிசு நிலங்களில் சாகுபடி: துணை இயக்குநர் ஆய்வு</u>

விழுப்புரம்: உளுந்தூர்பேட்டை பகுதியில் தோட்டக்கலை துணை இயக்குநர் வீராசாமி ஆய்வு செய்தார். தமிழக முதல்வரின் தரிசு நிலங்களை சாகுபடி கொண்டு வரும் திட்டத்தின் மூலம் இந்தாண்டு 1,217 ஏக்கர் பரப்பளவு தரிசு நிலங்களில் கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்

துமல்லி ஆகிய காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகள் மூலம் திட்டமிட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய கூடிய பயனாளிகள் கண்டறியப்பட்டு வேளாண்மை பொறி யியல் துறை மூலம் உழவு செய்யும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் காய்கறி பயிர்கள் விதைப்பு துவங்குவதற்கான ஏற்பாடுகள் தோட்டக்கலை துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளை உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் தோட்டக்கலை துணை இயக்குநர் வீராசாமி ஆய்வு செய்தார். உழவு பணிகள் மற்றும் எ.சாத்தனூர் கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடுகளை துணை இயக்குநர் வீராசாமி, நேரில் ஆய்வு செய்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி, தோட்டக்கலை அலுவலர் அலெக்ஸாண்டர் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்ததால், வானம் பார்த்த பூமியில், நிலக்கடலை மற்றும் சிறுதானியங்களை பயிரிட்டிருந்த விவசாயிகள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பாண்டில் வானம் பார்த்த பூமியில், 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், நிலக்கடலை மற்றும் சிறுதானியங்களை, விவசாயிகள் விதைத்தனர். செடிகள் வளரும் வேளையில், பருவ மழை பொய்த்து போனதால், செடிகள் கருகி வந்ததால். ஐந்து நாட்களுக்குள் மழை பெய்யவில்லை என்றால், நிலத்தில் உள்ள செடிகள் அனைத்தும் முற்றிலும் கருகி அழிந்துவிடும் நிலை ஏற்பட்டது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மழை பெய்ய வேண்டும், என்றும், விவசாயிகள் பல்வேறு பூஜைகளை செய்தனர். இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பகல் நேரத்தில், கடுமையான வெப்பம் வீசியது. மாலை நேரத்தில் சாரல் மழை பெய்தது. இரவு, 8 மணிக்கு மேல் மாவட்டம் முழுவதும் கன மழை பெய்தது. மாவட்டத்தில், அதிக பட்சமாக நெடுங்கல்லில், 87.20 மி.மீட்டர் மழை பதிவானது. இதனையடுத்து, ராயக்கோட்டை, 54, தேன்கனிக்கோட்டை, 52, அஞ்செட்டி, 50, பாரூர், 47, ஊத்தங்கரை, 45,

போச்சம்பள்ளி, 35, கிருஷ்ணகிரி, 34, சூளகிரி, 27, தளி, 13, பெனுகொண்டாபுரம், 12 மி.மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு மட்டும், 458 மி.மீட்டர் மழை பெய்தது. திடீர் மழையால், நிலங்களில் தண்ணீர் தேங்கியது. குறிப்பாக, வானம் பார்த்த பூமி அதிகம் உள்ள நெடுங்கல், போச்சம்பள்ளி, ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி ஆகிய இடங்களில் பெய்த கன மழையால், நிலக்கடலை உள்பட அனைத்து சிறுதானிய பயிர்களும் உயிர் பிழைத்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஒத்திவைப்பு</u>

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், நாளை (26ம் தேதி) நடைபெறவிருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், 30ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதுகுறித்து, கலெக்டர் ராஜேஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நாளை (26ம் தேதி) காலை, 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடைபெறவிருந்த, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், சில நிர்வாக காரணங்களால் நடைபெறாது. அதற்கு பதிலாக வரும், 30ம் தேதி காலை, 11 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் இந்த கூட்டம் நடைபெறும். அந்த கூட்டத்தில், விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவித்து, நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

## <u>வரட்டுப்பள்ளம் நீர் மட்டம் தொடர் மழையால் உயர்வு</u>

அந்தியூர்; அந்தியூர் மற்றும் சுற்று பகுதியான அத்தாணி, ஆப்பக்கூடல், வெள்ளிதிருப்பூர், பருவாச்சி, எண்ணமங்கலம், சென்னம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், கடந்த இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்திருந்த, நிலக்கடலை செடிகள், மழையின்றி காய்ந்து கிடந்தது. தற்போதைய மழையால் துளிர்விட்டுள்ளது. இதேபோல், பர்கூர்மலையில் உள்ள, அனைத்து கிராமங்களிலும், நல்ல மழை பெய்ததால், மலைவாழ் மக்கள் சாகுபடி

செய்திருந்த சோளம், மரவள்ளி, ராகி உள்ளிட் ட சாகுபடி பயிர்கள், செலுமையாக உள்ளது.மலைப்பகுதியில் உள்ள வனக்குட்டைகளில், தண்ணீர் ஓரளவு உள்ளதால், வன விலங்குகளுக்கு நீர் ஆதாரம் பெருகி உள்ளது. பர்கூர் மழைப்பகுதியில் பெய்துள்ள மழையால், கடந்த இரு நாட்களுக்கு முன்பு, 20 அடியாக இருந்த வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம், தற்போது, 22.19 அடியாக உயர்ந்துள்ளது.

## தரமான பசுந்தேயிலையை வழங்கி நல்ல விலையை பெற வேண்டும்; தேயிலை வாரிய இணை இயக்குனர் அறிவுரை

மஞ்சூர் : நீலகிரியில் சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையிலான, இரண்டாவது "மைக்ரோ' தேயிலை தொழிற்சாலை நேற்று திறக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்குள்ள கூட்டுறவு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் விவசாயிகள் தாங்கள் பறிக்கும் பசுந்தேயிலையை வினியோகித்து வந்தனர். இந்நிலையில், சிறு விவசாயிகளை மேம்படுத்தும் வகையில்,"மைக்ரோ' தேயிலை தொழிற்சாலைகளை அமைத்து சிறு தேயிலை விவசாயிகள், தரமான பசுந்தேயிலை வழங்கி நல்ல விலை பெற வேண்டும்' என, தேயிலை வாரியம் அறிவுறுத்தியது.அதற்கான பணிகளையும் செய்து வருகிறது. அதன்படி, கோத்தகிரி பகுதியில், கடந்த ஆண்டில் முதல் "மைக்ரோ' தேயிலை தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இந்த தொழிற்சாலைகளுக்கு சிறு தேயிலை விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. இந்நிலையில், ஊட்டி-மஞ்சூர் சாலையில், நுந்தளாமட்டம் பகுதியில் தாம்பட்டி கிராமத்தை சேர்ந்த பெள்ளராஜ் என்பவர் மைக்ரோ தேயிலை தொழிற்சாலை அமைத்திருந்தார். தொழிற்சாலை திறப்பு விழாவில் தேயிலை வாரிய இணை இயக்குனர் அம்பலவாணன் பங்கேற்று பேசுகையில்,""சிறு தேயிலை விவசாயிகள் தரமான பசுந்தேயிலை வழங்கி நல்ல விலை பெற வேண்டும் என்ற நோக்கில் மைக்ரோ தேயிலை தொழிற்சாலைகளை துவக்கப்படுவது குறித்து, தேயிலை வாரிய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அதற்கான வழிமுறைகளும் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இங்கு திறக்கப்பட்ட இத்தொழிற்சாலைக்கு இப்பகுதி சிறு விவசாயிகள்,

முழு ஒத்துழைப்பு கொடுத்து தரமான பசுந்தேயிலை வழங்கி நல்ல விலை பெற வேண்டும். மாவட்டத்தில் ஆண்டுக்கு 240 மில்லியன் கிலோ தேயிலை தயாரிக்கப்படுகிறது. அதில், 200 மில்லியன் கிலோ தான் தரமானதாக உள்ளது. மிதமுள்ளவற்றில் தரமில்லை.தற்போதுவரை "மைக்ரோ' தொழிற்சாலை அமைத்ததற்காக இது வரை மானியம் ஏதும் இல்லை. அதற்கான மானியம் அறிவிக்கப்பட்டால் விரைவில் வழங்கப்படும்," என்றார். தேயிலை வாரிய துணைத்தலைவர் ஹரி பிரசாத், தேயிலை வாரிய துணை இயக்குனர் ரமேஷ் மற்றும் கிராம மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## <u>விலையில்லா கால்நடை வழங்க சிறப்பு கிராமசபை</u>

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், அக்டோபர் முதல் டிசம்பர் முடிய, 150 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கவும், 2,020 பயனாளிகளுக்குசெம்மறி ஆடுகள் வழங்கவும் மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. கிராமப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பை ஊக்குவித்து, பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக, அரசு சார்பில், தகுதியுடைய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில், அக்டோபர் முதல் டிசம்பர் வரை, 150 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும், 2,020 பயனாளிகளுக்கு ஆடுகளும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு தகுதியுடைய பயனாளிகளை தேர்வு செய்வதற்காக அக்டோபர், 2ம் தேதியும், பயனாளிகள் இறுதி பட்டியல் அங்கீகரித்து ஒப்புதல் பெறுவதற்காக அக்டோபர், 13,14,15 ஆகிய தேதிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துமாறு, கிராமப் பஞ்சாயத்து தலைவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தில், பயன்பெற விரும்பும் பயனாளிகள் கிராமசபை கூட்டத்தில் பங்கேற்று கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வேண்டி மனு கொடுக்கலாம்.

## <u>தொடர் மழை எதிரொலி : விதைப்பு பணி துவக்கம்</u>

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள் விதைப்பு பணிகளை துவக்கி

யுள்ளனர். ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராம பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. காவேரியம்மாபட்டி, பெரியகோட்டை, அரசப்பபிள்ளைபட்டி, சாமியார்புதூரில் பலத்த மழை பெய்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களில் மக்காச் சோளம் மற்றும் சோளத்தினை விதைக்கும் பணியை துவக்கியுள்ளனர். இதுவரை விதைப்பில் ஆர்வம் செலுத்தாத பிற விவசாயிகள், முதற்கட்ட உழவு பணியில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். நூறுநாள் வேலை கிட்டம் தற்போது செயல்படாமல் உள்ளதால் விவசாய கூலி வேலைக்கான ஆட்கள் கிடைப்பதில் தடை இல்லாத நிலை ஏற்பட்டிருப்பது விவசாயிகளுக்கு சாதகமாக உள்ளது. விதை மற்றும் உரம் வாங்க வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட் பகுதியில் உள்ள உரக்கடைகள் அதிகாலையிலேயே திறக்கப்படுகின்றன. இதனால் நடப்பு ஆண்டில் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

**<u>கோம்பை பகுதி நிலக்கடலை விவசாயிகள் மகிழ்ச்சி : நல்ல விளைச்சலும், விலையும் கிடைப்பதால்</u>**

தேவாரம் : கோம்பை பகுதியில்,நிலக்கடலை எடுப்பு மும்முரமாக நடக்கிறது.தொடர் மழையால் நல்ல விளைச்சலும்,கூடுதல் விலையும் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோம்பை, வாழைக்கோம்பை,கொதம்பலூத்து உள்ளிட்ட பகுதியில் 2,500 ஏக்கருக்கு மேல் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆக., செப்., மாதங்களில் கோம்பை பகுதியில் பரவலாக சாரல் பெய்தது. தொடர்ந்து கிடைத்த வலுவான சாரலால் நிலக்கடலை நன்றாக பலன் பிடித்தது. தற்போது அறுவடை பணி மும்முரமாக நடக்கிறது. ஏக்கருக்கு 30 மூடைக்கு மேல் எடுப்பு உள்ளது. கூடுதல் மகசூல் கிடைத்துள்ள நிலையில், விலையும் ஒரு மூடைக்கு ஆயிரத்து 500 ரூபாய்க்கு மேல் விற்பனையாகிறது. விவசாயிகள் கூறியதாவது: காம்பை பகுதியில், ஆடி மற்றும் சித்திரை பட்டத்தில் நிலக்கடலை, எள், தக்காளி பயிரிடப்படும். சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், விவசாய பணிகள் முடங்கின. இந்த ஆண்டு நல்ல மழை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில்,

அனைத்து தரப்பு விவசாயிகளும் நிலக்கடலை பயிரிட்டோம். உழவு, விதை, விதைப்பு என ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவானது.செடியில் பலன் பிடிக்கும் நேரத்தில் தொடர் மழை பெய்ததால், நல்ல மகசூல் கிடைத்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 30 மூடைக்கு மேல் வரத்துள்ளதால், செலவு போக 40 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. நிலக்கடலை செடி மாட்டு தீவனத்திற்காக, கால்நடை வளர்ப்போர் விரும்பி வாங்குவதால், ஒரு ஏக்கர் செடி 4,500 ரூபாய் வரை விற்பனையாகிறது. செடியும் விவசாயிகளுக்கு கணிசமான லாபம் ஈட்டி தருகிறது, என்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>தொட்டியம் பகுதியில் மழை மானாவாரி பயிர்கள் தப்பின விவசாயிகள் மகிழ்ச்சி</u>

தொட்டியம்: தொட்டியம் தாலுகா வில் காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி, தொட்டியம் ஆகிய 3 பிர்காக்களில் உள்ள 30 வருவாய் கிராமங்களில் சுமார் 13 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி விதைவிதைப்பு செய்துள்ள நிலை யில் விதை முளைத்தும், துளிர்விட்டும் உள்ளன. வழக்கமாக மானாவாரி விதைகள் ஆடி மாதக்தில் விதைப்பது வழக்கம். ஆனால் ஆடி மாதக்தில் மழை பெய்யாததால் ஆவணி மாத முதல் வாரத்தில் தொட்டியம் பகுதியில் பெய்த மழையை தொடர்ந்து மானாவாரி நிலங்களை உழவு செய்தனர். பின்னர் இடுபொருட்கள் இட்டு நிலத்தை பண்படுத்தி கடலை, சோளம், துவரை, தட்டை, பாசி பயிறு, மொச்சை உட்பட பல்வேறு விதைகளை மானாவாரி விவசாயிகள் விதைக்கனர். இதற்கிடையே ஒரு சில நிலங்கள் உழுது பண்படுத்தியும் போதியமழை இல்லாததால் விதை விதைக்காமல் தரிசாகவே கிடந்தன. விதை விதைக்கப்பட்ட சில நாட்கள் மானாவாரி

நிலங்கள் ஈரப்பதத்துடன் இருந்ததால் விதைகள் மளமளவென முளைக்கத் துவங்கின. ஆனால் அதனை தொடர்ந்து போதிய மழை இல்லாததால் முளைச் செடிகள் வாடி கருக தொடங்கின. குறிப்பாக சோள பயிர்கள் முற்றிலுமாக கருகி விட்டன. கடலை பயிர்களும் வாடத்தொடங்கியது. இந்நிலையில் கடந்த 2 நாட்களாக தொட்டியம் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் மானாவாரி தப்பியது. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் வர்ண பகவனுக்கு நன்றி தெரிவித்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் நாளை நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் 30ம்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ விடுத்துள்ள செய்திக்குறிப்பில், திருச்சி மாவட்டத்தில் நாளை (26ம்தேதி) நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஈராண்டு ஆய்விற்காக வருவாய் நிர்வாக ஆணையர் திருச்சி மாவட்டத்திற்கு வருகை புரிவதையொட்டி ஒத்திவைக்கப்படுகிறது. விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 30ம்தேதி (செவ்வாய்) நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

## வேளாண் கருத்தரங்கம்

கரூர்: கரூரில் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் வேளாண் உற்பத்தியை பெருக்கிட, நுண்ணீர் பாசன முறைகள் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.கரூர் பைபாஸ் சாலையில் உள்ள அமைந்துள்ள ஹோட்டலில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில், நுண்ணீர் பாசனம் முறைகள் குறித்த தொழில்நுட்பங்கள், பராமரிப்பு, நீர்வழி, உரமிடுதல் குறித்து விரிவாக மகளிர் தோட்டக்கலைக் கல்லுாரி வேளாண் பொறியியல் கல்லுாரி மற்றும் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் கலந்து கொண்டு பேசினர். மேலும், நுண்ணீர் பாசன கருவிகள் குறித்த கருத்துக்காட்சியும் நடைபெற்றது. இதில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## குமரியில் இன்று மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்

நாகர்கோவில், : குமரியில் இன்று இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குமரி மாவட்டத்தில் வெயில் கொளுத்தி வரும் நிலையில் கடந்த 2 நாட்களாக மலையோர பகுதிகளில் மழை பெய்து வருகிறது. நேற்றும் பெருஞ்சாணி, பாலமோர், மார்த்தாண்டம், நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் சாரல் மழை பெய்தது. பெருஞ்சாணியில் 13.2 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பாலமோரில் 9.3 மி.மீ மழை பெய்திருந்தது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.15 அடியாக இருந்தது. அணைக்கு 151 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 68.65 அடியாக இருந்தது. அணைக்கு 130 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்ட நிலையில் 700 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. சிற்றார்-1ல் 15.15 அடியும், சிற்றார்-2ல் 15.25 அடியும், பொய்கையில் 5.30 அடியும், மாம்பழத் துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. இன்று குமரி மாவட்டத்தில் இடியுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே தென் தமிழக கடற்கரை பகுதியில் பலத்த காற்று வீசும் என்றும், கடலுக்கு செல்கின்ற மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் கடல் தகவல் சேவை மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

## நாமக்கல் மாவட்டத்தில் மழை அளவு விபரம்

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளில் கடந்த இரு நாட்க ளாக பரவலாக மழை பெய்து வருகிறது. நாமக்கல் நகரில் நேற்று முன்தினம் இரவு சுமார் 2 மணி நேரம் மழை கொட்டியது. இதன �ல் நகரின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கியது. புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு, குமாரபாளையம் பகுதியி லும் நேற்று இரவு கனமழை பெய்துள்ளது. கொல்லிமலையிலும் தொ டர்ந்து மழை பெய்து வரு வதால் அருவிகளுக்கு தண் ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தின் பல பகுதிகளில் பதிவான மழை விபரம்: (மில்லிமீட்டரில்) நாமக்கல்- 27, பரமத்திவேலு�ர்- 35, ராசிபுரம்- 24, சேந்தமங்கலம்-48, திருச்செங்கோடு-13, எருமப் பட்டி- 30, புதுச்சத்திரம்-2, குமாரபாளையம்- 5, மோகனு�ர்- 30, மங்களபுரம்- 26 மில்லிமீட்டர்.

## <u>புதுச்சத்திரம், பள்ளிப்பாளையத்தில் கொட்டி தீர்த்தது மழை</u>

சேந்தமங்கலம், : புதுச்சத்திரத்தில் கொட்டி தீர்த்த மழையால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்தது. மேலும் 25 ஆண்டுகளாக வறண்டு கிடந்த அணை கண்னூர்பட்டி அணை நிரம்பியது. நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் அதன் சுற்றுப்பகுதியான கண்ணூர்பட்டி, கோவிந்தம் பாளையம், தாத்தையங்கார்பட்டி, ஈழனுசா வடி, பாய்ச்சல் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு இடியுடன் பலத்த மழை பெய்தது.இரவு 11 மணிக்கு தொ டங்கிய மழை அதிகாலை 3 மணி வரை கொட்டி தீர்த்தது. கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பயிரிட்ட சோளம், மரவ ள்ளி, கடலை, உள்ளிட்ட வை பயிரிட்டனர். போதிய மழை இல்லாததால் அவை கள் கருக தொடங்கின.ஆனால் நேற்று முன் தினம் பெய்த மழையால் விவசாயிகள் பெரும் மகிழ் ச்சி அடைந்தனர்.மேலும் கடந்த 25 ஆண்டுகளாக நிரம்பாமல் இருந்த கண்ணூர்பட்டி அணை, கிண றுகள் நிரம்பி வழிந்தன. மேலும் புதுச்சத்திரம் சார் பதிவாளர் அலுவலகம் அருகே உள்ள 10க்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடு களில் வெள்ளம் புகுந்தது. இதுகுறித்து இப்பகுதி பொதுமக்கள் கூறும்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்கள் இங்குள்ள மழை நீர் கால்வாய்களை மூடிவிட்டனர்.மேலும் 10க்கும் மேற்ப ட்ட பா லங்கள் அடை ப்ப ட்டு உள் ளது. எனவே தான் மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் புகுந்தது. எனவே மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் குமாரபாளையம் சுற்றுப் பகுதியில் நேற்று நள்ளிரவு 12 மணிக்கு மேல் மழை கொட்டி தீர்த்தது. பலத்த இடி மின்னலுடன் மழை கொட்டியதால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடைகளில்

வழிந்தோடின. படைவீடு பகுதியில் உள்ள கணக்கங்காடு, அருந்ததியர் தெரு, இந்திரா நகர் பகுதிகளில் உள்ள 18 வீடுகளில் வெள்ளம் புகுந்தது. வெள்ளநீர் வழிந்தோடும் பகுதியில் தூர்வாரப்படாததால் ஓடைபகுதிகள் முள்செடிகள் கட்டை கள், குச்சிகள் போன்றவை அடைக்துக்கொண்டது. வெளியேற வழியின்றி தேங்கிய தண்ணீர் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்தன. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இரவு முழுவதும் தூக்கமின்றி குழந்தைகளுடன் தவித்தனர். காலையில் படிப்படியாக வெள்ளம் வடிந்ததா ல் வீடுகளை சுத்தம் செய்த மக்கள் மீண்டும் குடியேறினார்கள். இந்த பகுதியில் பல வீடுகளின் தரைகள் சேதமாகியுள்ளன. சிலரின் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. சம்பவம் அறிந்த திருச்செங்கோடு தாசில்தார் குப்புசாமி பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் தெரி வித்து அரசு உதவி களை வழங்கினார்.வெள்ளிகுட்டை, காளரங்காடு, சின்னஆனங்கூர், அருவாபுலியூர் ஆகிய பகுதிகளில் உள்ள தடுப்பணைகள் ஏரிகள் நிரம்பிவழிந்தன. அருவாபுலியூர், வெள்ளிகுட்டை ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகளில் தண்ணீர் கொப்பளித்து மேலே கிளம்பின. இதனால் ஏரியில் நீர் இடி இறங்கியுள்ளதாக செய்தி பரவியதால் அப்பகு தி மக்கள் திரண்டு வந்து பார்த்தனர்.வேலாத்தாள் கோயில் அருகே தனியார் நுற்பு ஆலையில் 10 அடி சுற்றுசுவர் 80 அடி நீளத்திற்கு இடிந்து விழுந்தது. ஆலையில் வேலை செய்த தொழிலாளர்கள் அதிர்ஷ்டவசமாக காயமின்றி தப்பினார்கள். மாவட்டத்தில் மழை அளவு நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழைபெய்துள்ளது. நாகக்கல் நகரில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு சாரல் மழை பெய்தது. புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோட்டில் கனமழைபெய்துள்ளது. இதனால் பலவீடுகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தின் பல பகுதிகளில் பதிவான மழை விபரம்: (மில்லிமீட்டரில்) நாமக்கல்- 6, ராசிபுரம்- 80, சேந்தமங்கலம்-7, திருச்செங்கோடு-5, எருமப்பட்டி- 15, புதுச்சத்திரம்-20, குமாரபாளையம்- 25, மோகனு£ர்- 17 மில்லிமீட்டர்.

## துறையூர் ஒழுங்குமுறை கூடத்தில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் மறைமுகம் ஏலம் விடப்பட்டது. இதில் ஒரு கிலோ ரூ.15.50க்கு போனது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் புதன்கிழமைதோறும் கடந்த 11 வாரமாக நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த மறைமுக ஏலத்தில் துறையூர் வெங்கடாஜலபுரம், காட்டம்பட்டி, பகளவாடி, சிக்கத்தம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 41 மூட்டை சின்ன வெங்காயத்துடன் 7 விவசாயிகள் பங்கேற்றனர். இதேபோல் பெரம்பலுhர், பாடலூர், துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 17 வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.33, 892 மதிப்பில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் ஏலம் போனது. இதில் தரமான வெங்காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.15.50க்கும், சராசரியாக கிலோ ரூ.12க்கும் ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் அடுத்தவாரம் புதன்கிழமை தொடர்ந்து சின்ன வெங்காயம் ஏலம் நடைபெற உள்ளதால் இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் கலந்து கொள்ளும்படியும், வெங்காயத்திற்குரிய பணத்தையும் உடனே பெற்றுக் கொள்ளலாம் என வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டார்.

## மானாவாரி பயிர்கள் தப்பின விவசாயிகள் மகிழ்ச்சி

தொட்டியம்: தொட் டியம் பகுதியில் கடந்த 2 நாட்களாக தொடர் மழை பெய்ததால் நிலக்கடலை உள்ளிட்ட மானாவாரி பயி ர்கள் தப்பியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொட்டியம் தாலு

காவில் காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி, தொட்டியம் ஆகிய 3 பிர்காக்களில் உள்ள 30 வருவாய் கிராமங்களில் சுமார் 13 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி விதைவிதைப்பு செய்துள்ள நிலையில் விதை முளைத்தும், துளிர்விட்டும் உள்ளன. வழக்கமாக மானா வாரி விதைகள் ஆடி மாத த்தில் விதைப்பது வமக்கம். ஆனால் ஆடி மாகக்கில் மமை பெய்யாககால் ஆவணி மாக முதல் வாரத் தில் தொட்டியம் பகுதியில் பெய்த மழையை தொடர்ந்து மானாவாரி நிலங்களை உழவு செய்தனர். பின்னர் இடுபொருட்கள் இட்டு நில த்தை பண்படுக்கி கடலை, சோளம், குவரை, கட்டை, பாசி பயிறு, மொச்சை உட் பட பல்வேறு விதைகளை மானாவாரி விவசாயிகள் விதைத்தனர். இதற்கிடையே ஒரு சில நிலங்கள் உழுது பண்படுத்தியும் போகியமமை இல்லாககால் விதை விதைக்காமல் கரிசாகவே கிடந்கன. விதை விதைக்கப்பட்ட சில நாட்கள் மானாவாரி நிலங்கள் ஈரப்பதத்துடன் இருந்ததால் விதைகள் மளமளவென முளைக்கத் துவங் கின. ஆனால் அதனை தொடர்ந்து போதிய மழை இல்லாததால் முளைச் செடி கள் வாடி கருக தொட ங்கின. குறிப்பாக சோள பயிர்கள் முற்றிலுமாக கருகி விட்டன. கடலை பயிர்களும் வாடத்தொடங்கியது. இந்நிலையில் கடந்த 2 நாட்களாக தொட்டியம் பகு தியில் பலத்த மழை பெய்து வரு வதால் மானா வாரி தப்பி யது. மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் வர்ண பகவனுக்கு நன்றி தெரிவித்தனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

பாபநாசம்: அய்யம்பேட்டை அடுத்த சூலமங்கலம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. முகாமில் 500 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் அய்யம்பேட்டை கால்நடை உதவி மருத்துவர் செல்வக்குமார், கால்நடை ஆய்வாளர் சிவசக்தி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் பன்னீர்செல்வம், ஊராட்சி தலைவர் மணிமாறன், துணைத்தலைவர் அறிவழகன் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தும்கூர் அருகே உணவு பூங்கா திறப்பு 'விவசாய வளர்ச்சியில் தனியார் முதலீடு ஊக்குவிக்கப்படும்' பிரதமர் நரேந்திரமோடி பேச்சு




பெங்களூர், விவசாய வளர்ச்சியில் தனியார் முதலீடு ஊக்குவிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திரமோடி கூறினார். **உணவு பூங்கா திறப்பு** தும்கூரில் 110 ஏக்கர் பரப்பளவில் உணவு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்த உணவு பூங்கா திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி கலந்து கொண்டு உணவு பூங்காவை தொடங்கி வைத்து பேசியதாவது:- "முன்பு மத்திய அரசு மற்றும் மாநில அரசு என்ற பாரபட்சம் இருந்தது. இதனால் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. மத்திய அரசின் திட்டங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. நான் பிரதமராக பதவி ஏற்ற பிறகு பாரபட்சம் காட்டாமல் அனைவரின் நம்பிக்கையை பெற்று செயல்பட முடிவு செய்துள்ளேன். **தயக்கம் காட்டின** மத்தியில் வேறு கட்சி ஆட்சி இருந்தாலும் அதை பற்றி கவனம் செலுத்தாமல் நாட்டின் வளர்ச்சியில் அனைவரும் கைகோர்த்து செயல்பட வேண்டும். முன்பு மத்தியில் மாற்று கட்சி ஆட்சி இருந்தபோது மத்திய அரசின் நிதியை பயன்படுத்தி கொள்வதில் மாநில அரசுகள் தயக்கம் காட்டின. மத்தியில் யார் ஆட்சியில் இருந்தாலும் நாட்டின்

வளர்ச்சி முக்கியம் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். விவசாயிகள் நாட்டுக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் மட்டும் ஏழ்மையில் இருக்கிறார்கள். விவசாயிகள் வளம்பெற்றால்தான் நாட்டின் கஜானா நிறையும். உணவு பாரம்பரியம் நமது நாட்டுக்கு புதியது ஒன்றும் இல்லை. பழங்காலத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. **தனியார் பங்களிப்பு** உணவு பதப்படுத்துவதன் மூலம் உணவு பொருட்கள் கெடுவதை தடுக்க முடியும். இந்தியாவுக்கு இன்று வரலாற்று முக்கியத்துவமான தினம். செவ்வாய் கிரகத்தில் மங்கள்யான் விண்கலம் வெற்றிகரமாக சேர்க்கப்பட்டு உள்ளது. அதேபோல் நாட்டின் முதல் உணவு பதப்படுத்தும் பூங்காவை நான் தொடங்கி வைத்ததை எனக்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறேன். விவசாய வளர்ச்சியில் தனியார் முதலீட்டுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இதில் முதலீடு செய்ய முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். கிராமப்புறங்களில் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் நகரங்களை நோக்கி குடியேறுகிறவர்களின் எண்ணிக்கை குறையும். ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிக்கு ஒரு முறை நான் நேரில் சென்று இருந்தேன். **பூங்கொத்தில்புகைப்படம்** அங்கு பூங்கொத்துகளில் எனது புகைப்படம் இருந்தது. இது எப்படி உங்களால் முடிந்தது என்று நான் கேட்டேன். லேசர் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதாக அவர்கள் கூறியதை கேட்டு நான் வியப்படைந்தேன். அவர்கள் விற்ற பூ 2 ரூபாய்க்கு கூட விற்பனை ஆகவில்லை என்றும், எனது புகைப்படம் போட்ட பிறகு ரூ.200 வரைக்கும் விற்பனை ஆவதாகவும் அவர்கள் கூறினர். விவசாயிகள் பயன் பெறும் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்க வேண்டும். வெறும் அறிவிப்புகளால் நாடு வளர்ச்சி பெற முடியாது என்பதை உணர வேண்டும்." இவ்வாறு நரேந்திரமோடி பேசினார். விழாவில் கர்நாடக கவர்னர் வஜூபாய் வாலா, முதல்-மந்திரி சித்தராமையா, மத்திய மந்திரிகள் சதானந்தகவுடா, அனந்தகுமார், மாநில சட்ட மந்திரி ஜெயச்சந்திரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தென்னை மரங்களில் நத்தைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?

தென்னை மரங்களில் நத்தைப்புழு நோய் தாக்குதலை கட்டுப் படுத் துவது எப்படி? என்று ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் விளக்கம் அளித்துள்ளனர். அட்மா திட்ட கூட்டம் பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்ட (அட்மா) கூட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ராமநாதபுரம் பத்ரகாளியம்மன் கோவில் வளாகத் தில் நடைபெற்றது. கூட்டத் திற்கு அட்மா திட்ட வட்டார தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். வடக்கு ஒன்றிய குழு தலைவர் செல்வி பத்மினி, தென்னிந்திய தென்னை விவ சாயிகள் சங்க செயலாளர் தாத்தூர் கிருஷ்ணசாமி ஆகி யோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை துறை உதவி இயக்குனர் உமாராணி வரவேற்று பேசினார். கூட்டத்தில் ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் சீனிவாசன், பயிர் நோயியல் துறை பேராசிரியர் ராம் ஜெகதீஷ், பயிர் இனப்பெருக்க துறை பேராசிரியர் சுப்பிர மணியம் ஆகியோர் தென்னை மரங்களில் நத்தைப்புழு நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து பேசினார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது:- நத்தைப்புழு தென்னை மரங்களை தாக்கும் நத்தைப்புழுவின் உடம்பில் கூர்மையான முள் காணப்படும். இதில் சுரக்கும் திரவம் மனிதனின் தோலில் பட்டால் அரிப்பை ஏற்ப டுத்தும். நத்தைப்புழு 30-ல் இருந்து 40 நாட்கள் வரை தென்னை மரங்களின் இலை களை சேதப்படுத்தும். இதன் கூட்டுப்புழு பருவம் 10-ல் இருந்து 12 நாட்களில் அந்து பூச்சிகளாக வெளி வந்து தென்னை ஓலைகளை சேதப் படுத்தும். இதனால் தென்னை ஓலை கள் குச்சி போன்று காணப் படும். பாதிப்படைந்த ஓலை களின் கீழ் பகுதிகளை வெட்டி எரித்து விட வேண்டும். இரவு 7 மணியில் இருந்து 11 மணி வரை பாதிக்கப்பட்ட தென்னந்தோப்பில் ஏக்கருக்கு ஒன்று என்ற விகிதத்தில் விளக்குப் பொறி வைத்து அந்துப்பூச்சிகளை சேகரித்து அழிக்க வேண்டும். விளக்கு பொறியை பகல்நேரங்களிலும், இரவு 11 மணிக்கு மேலும் வைக்கக்கூடாது. காரணம் அந்த நேரங்களில் நன்மை செய்யும் பூச்சிகள் பாதிப்படைய நேரிட்டு விடும். தேங்காய் அறுவடை நத்தைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த டைக் ளோர் வாஸ் மருந்தை ஒரு

லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. அளவு கலந்து 'ராக்கர்' தெளிப்பான் மூலம் இலைகளில் தெளிக்க வேண்டும். தீவிர தாக்குதல் ஏற்பட்டால் மோனோ குரோட்டோபாஸ் மருந்து 10 மி.லி. மற்றும் அதே அளவு தண்ணீரில் கலந்து பாலிதீன் பையில் இட்டு வேர் மூலம் செலுத்த வேண்டும். வேர் மூலம் மருந்து செலுத்தும் போது 45 நாட்களுக்கு பிறகு தான் தேங்காய் அறுவடை செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள். கூட்டத்தில் மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் முகமது இக்பால், நீர்வடி நிலை திட்ட தலைவர் பொன்னுசாமி, வடக்கு ஒன்றிய துணை தலைவர் ரத்தி னகுமார், அட்மா வட்டார மேலாளர் சண்முகபிரியா, வல்லுனர்கள் உமாஷாலினி, நாகராஜ் உள்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை அதிகாரி கவிதா நன்றி கூறினார்.

**<u>பலத்த மழை எதிரொலி: குஜிலியம்பாறை அருகே குளக்கரை உடைந்தது</u>**



குஜிலியம்பாறை, பலத்த மழை எதிரொலியாக குஜிலியம்பாறை கம்புகுத்தியூர் குளம் நிரம்பிய நிலையில், குளக்கரையில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகி செல்கிறது. உடைப்பை சரிசெய்ய விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். பலத்த மழை திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை பகுதியில் கடந்த சில தினங்களாக கடும் வெயில் கொளுத்தி வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவில் இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. குஜிலியம்பாறை மற்றும் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் சுமார் 1½

மணி நேரம் இந்த பலத்த மழை கொட்டி தீர்த்தது. இதனால் திண்டுக்கல்-கரூர் மற்றும் மணப்பாறை சாலைகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றது. பலத்த மழை காரணமாக குஜிலியம்பாறை பகுதியில் உள்ள காட்டாற்று ஓடைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான குளங்கள் நிரம்பி வருகின்றன. குளக்கரையில் உடைப்பு அதே போல் குஜிலியம்பாறையில் உள்ள கம்புகுத்தியூர் குளத்திற்கும் நீர்வரத்து அதிகரித்ததால் இந்த குளம் ஒரே நாளில் நிரம்பியது. மறுகால் செல்லும் பகுதியில் தண்ணீர் அதிகளவில் வெளியேறியது. இதனால் அந்த இடத்தைஒட்டியுள்ள கரையில் நேற்று முன்தினம் இரவு திடீரென உடைப்பு ஏற்பட்டது. இந்த உடைப்பு வழியாக குளத்தில் நிரம்பிய தண்ணீர் பெருக்கெடுத்து வெளியேறியது. குளத்தில் உடைப்பு ஏற்பட்டதை அறிந்த அப்பகுதி பொதுமக்கள் உடைப்பை சரி செய்ய முயன்றனர். ஆனால் தண்ணீர் முழுவதும் வீணாக வெளியேறி செல்கிறது. ஏற்கனவே குஜிலியம்பாறை வறட்சியின் பிடியில் சிக்கி உள்ள பகுதியாகும். இந்த நிலையில் மழை பெய்தும் அந்த தண்ணீர் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயன் அளிக்காமல் வீணாகி சென்றதால் மக்கள் வேதனை அடைந்துள்ளனர். கோரிக்கை எனவே குளக்கரையில் ஏற்பட்டுள்ள உடைப்பை உடனடியாக சரிசெய்து கரையை வலுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அப்போது தான் அடுத்து வரும் காலங்களில் பலத்த மழையின் போது கரையில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதுடன் தண்ணீர் வீணாகும் அவலநிலை மாறும் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

<u>**சிறிய அளவிலான தேயிலை தொழிற்சாலைகள் தொடங்கினால் மானியம்**</u>



மஞ்சூர் அருகே நுந்தளா மட்டத்தில் தேயிலை தொழிற்சாலையை தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தொடங்கி வைத்த காட்சி.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் சிறிய அளவிலான தேயிலை தொழிற்சாலைகள் தொடங்கினால் மானியம் வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தெரிவித்து உள்ளார். திறப்புவிழா மஞ்சூர் அருகே நுந்தளா மட்டத்தில் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட மைக்ரோ தேயிலை தொழிற் சாலை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் தென் னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பல வாணன் கலந்து கொண்டு தொழிற்சாலையை திறந்து வைத்தார். தேயிலை வாரிய துணை தலைவர் ஹரிபிரசாத், முன் னாள் கூடுதல் தலைமை செய லாளர் சுந்தரதேவன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். விழாவில் செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது:- நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக பச்சை தேயிலைக்கு கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டு வரு கிறது. குன்னூர் தேயிலை தூள் ஏல மையத்தில் 30 வர்த் தகர்கள் மட்டுமே பங்கேற் கின்றனர். ஆனால் கொல் கத்தாவில் நடைபெறும் ஏலத்தில் 200-க்கும் மேற்பட்ட வர்த்த கர்கள் கலந்து கொள்கின்றனர். மேலும் தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுவது இல்லை. இது போன்ற கார ணங்களால் தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. எனவே தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்ய விவசாயி கள் இடையே தேயிலை வாரி யம் சார்பில் விழிப்புணர்வு முகாம் நடந்து வருகிறது. நீல கிரி மாவட்டத்தில் ஒரு ஆண் டிற்கு 240 மில்லியன் கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய் யப்படுகிறது.

200கிலோ தேயிலை தூள் உற்பத்தி மேலும் விவசாயிகள் சிறிய அளவில் தேயிலை தூள் உற்பத்தி தொழிற்சாலை (மைக்ரோ) அமைக்க நட வடிக்கை எடுத்து வருகிறோம். முதல் முறையாக கோத்தகிரி யில் ஆர்க்கானிக் மைக்ரோ தேயிலை தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அந்த தொழிற்சாலை தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. 2-வது தொழிற்சாலை இங்கு திறக்கப்பட்டு உள்ளது. இது ஆர்த்தோடெக்ஸ் ரக தேயிலை தூளை உற்பத்தி செய்யும். இந்த மைக்ரோ தேயிலை தொழிற்சாலைகளில் ஒரு நாளைக்கு 800 கிலோ பச்சை தேயிலையை கொள் முதல் செய்யமுடியும். இதன் மூலம் 200 கிலோ தேயிலை தூள் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த சிறிய அளவிலான தேயிலை தொழிற்சாலைகளை சிறு விவசாயிகள் இணைந்து தொடங்கலாம் அல்லது விவ சாய சங்கங்கள் மூலமும் தொடங்கலாம். இதற்கு தற் போது மானியம் வழங்கப்படு வது இல்லை. எதிர்காலத்தில் இது போன்ற தொழிற்சாலை கள் தொடங்க மானியம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். இதில் குந்தா மண்டல தேயிலை வாரிய உதவி இயக் குனர் ரமேஷ், தர மேம்பாட்டு அலுவலர் விவேக், நீலகிரி தேயிலை சாகுபடியாளர் சங்க தலைவர் மஞ்சைமோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.